



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.11.2025) சென்னையில் நடைபெற்ற சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன் போட்டிகளில் ஒற்றையர் பிரிவில், சாம்பியன் பட்டம் வென்ற இந்தோனேசியாவைச் சேர்ந்த வீராங்கனை ஜானிஸ் ஜென்னுக்கு கோப்பை மற்றும் பரிசுத்தொகை, இரண்டாம் இடத்தைப் பெற்ற ஆஸ்திரேலியா நாட்டின் கிம்பர்லி பிரல் ஆகியோருக்கு பதக்கம், மற்றும் காசோலை வழங்கி, பாராட்டினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி. கே.சேகர்பாபு, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, மேயர் திருமதி ஆர்.பிரியா, நா. எழிலன் எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தமிழ்நாடு டென்னிஸ் சங்கத் தலைவர் விஜய் அமிர்தராஜ், இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சர்வதேச மகளிர் டென்னிஸ் சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன் போட்டிகளில்

# வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு கோப்பைகள் - பரிசுத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ.4-**

**சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன் போட்டிகளில் வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோப்பை மற்றும் பரிசுத் தொகை வழங்கி பாராட்டினார்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.11.2025) சென்னை, நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன் போட்டிகளில் ஒற்றையர் பிரிவில் வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு கோப்பைகள் மற்றும் பரிசுத் தொகைக்கான காசோலைகளை வழங்கி, பாராட்டினார்.

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

'தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை உலகத் தரத்தில் மேம்படுத்தி, செஸ் ஒலிம்பியாட், ஸ்குவாஷ் உலக கோப்பை போட்டிகள், ஆசிய ஆடவர் சாம்பியன்ஸ் ட்ரோபி ஹாக்கி போட்டிகள் என பல்வேறு போட்டிகளை சிறப்பாக நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

3 ஆண்டுகளுக்குப் பிறகு WTA 250 சிறப்பாக சென்னையில் நடத்தப்பட்டது. இதற்கென தமிழ்நாடு அரசு ரூபாய் 12 கோடி நிதி உதவி அளித்து போட்டி சிறப்பாக நடத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில், சென்னை, நுங்கம்பாக்கம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் டென்னிஸ் விளையாட்டரங்கில் மீண்டும் உலகத் தரத்திலான சென்னை ஓபன் மகளிர் சர்வதேச டென்னிஸ் சாம்பியன்ஷிப் WTA 250 போட்டி, இந்தியாவில் இதுவரை இல்லாத அளவிற்கு உயர்ந்த சர்வதேச தரவரிசை கொண்ட சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் 27.10.2025 முதல் 02.11.2025 வரை நடைபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டிகளில், முதல் நான்கு சுற்றுகளுக்குப் பிறகு, ஒற்றையர் பிரிவில், இந்தோனேசியா நாட்டைச் சேர்ந்த ஜானிஸ் ஜென் மற்றும் ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த கிம்பர்லி பிரல் ஆகியோர் இறுதி போட்டியில் விளையாடினர். இதில் 64, 63 என்ற செட் கணக்கில் ஜானிஸ் ஜென் வெற்றி பெற்றார்.

சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன் போட்டிகளில் வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று பரிசுத் தொகைக்கான காசோலைகள் மற்றும் கோப்பைகள் வழங்கி, பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் நா. எழிலன், துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, தமிழ்நாடு டென்னிஸ் சங்கத் தலைவர் விஜய் அமிர்தராஜ், இந்து குழுமத்தின் இயக்குநர் என்.ராம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சர்வதேச மகளிர் டென்னிஸ் சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# SIR க்கு எதிரான - அனைத்துக் கட்சிக் கூட்டம்!

## 46 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பு!

**சென்னை, நவ.4-**

**சென்னையில், கழகத்தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (2.11.2025) சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு (S.I.R.) எதிராக நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகளின் விபரம் வருமாறு:-**

1. திராவிட முன்னேற்றக் கழகம்
2. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி
3. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்
4. திராவிடர் கழகம்
5. விடுதலை சிறுத்தைகள் கட்சி
6. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
7. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
8. மக்கள் நீதி மய்யம்
9. இந்திய யூனியன் முஸ்லீம் கட்சி
10. கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி
11. தமிழக வாழ்வுரிமைக் கட்சி
12. மனிதநேய மக்கள் கட்சி
13. தேசிய முற்போக்கு திராவிட கழகம்
14. மனிதநேய ஜனநாயக கட்சி
15. மூவேந்தர் முன்னேற்றக் கழகம்
16. ஆம் ஆத்மி கட்சி
17. தமிழ்நாடு விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சி
18. தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம்
19. கொங்கு இளைஞர் பேரவை
20. முக்குலத்தோர் புலிப்படை
21. எஸ்.டி.பி.ஐ. கட்சி
22. இந்திய தேசிய லீக் கட்சி
23. அகில இந்திய பாட்டாளி முன்னேற்ற கட்சி
24. தமிழ் மாநில தேசிய லீக் கட்சி
25. பெருந்தலைவர் மக்கள் கட்சி
26. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்– லெனினிஸ்ட்)
27. மக்கள் விடுதலை கட்சி
28. சமத்துவ மக்கள் கழகம்
29. தமிழக முற்போக்கு மக்கள் கட்சி
30. ஆதித் தமிழர் பேரவை
31. பசும்பொன் தேசிய கழகம்
32. கலப்பை மக்கள் இயக்கம்
33. புதிய திராவிடர் கட்சி
34. அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சி
35. தமிழக மக்கள் ஜனநாயக கட்சி
36. புரட்சி பாரதம் கட்சி
37. பகுஜன் சமாஜ் கட்சி
38. இந்திய ஜனநாயக கட்சி
39. புதிய நீதிக் கட்சி
40. இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம்
41. அனைத்திந்திய மூவேந்தர் முன்னணிக் கழகம்
42. அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி
43. ஆதித் தமிழர் கட்சி
44. சமதா கட்சி
45. தமிழ்ப்புலிகள் கட்சி
46. அகில இந்திய வல்லரசு பார்வார்டு பிளாக்

உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.




நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகம் டாக்டர் கலைஞர் அரங்கில் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. உடன் தொகுதி பார்வையாளர்கள் ஜோசப் ராஜ், கணேஷ்குமார் ஆதித்தன், முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், கே.கே.சி.பிரபாகரன், மாவட்ட துணை செயலாளர்கள் தமிழ்ச்செல்வன், மைக்கேல், தமயந்தி உள்பட ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### பிரதமர் பேச்சு: பீகாரில் தேர்தல் நடக்கும் நேரத்தில், அங்கு நிலவும்

# வேலையில்லாத் திண்டாட்டத்தை - வறுமையைத் திசை திருப்பி வாக்குப் பெறவே!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டன அறிக்கை!

*சென்னை, நவ. 4 -*

தமிழ்நாட்டில் பீகாரிகள் வஞ்சிக்கப்படுகிறார்கள், தாக்கப்படுகிறார்கள் என்று பொறுப்பு வாய்ந்த பிரதமர் பதவியில் இருப்பவர் பேசலாமா? வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் தலை விரித்தாடும் பீகாரில், நடக்கவிருக்கும் தேர்தலில் திசை திருப்பும் முயற்சிதான் இது - கண்டிக்கத்தக்கது இது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:

பிரதமர் நரேந்திர மோடி அக்டோபர் 30, 2025 அன்று பீகார் மாநிலத்தின் சாப்ராவில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசிய பேச்சு நாடு தழுவிய அளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திவிட்டது.

"தமிழ்நாட்டில் பீகார் மாநில தொழிலாளர்கள் தாக்கப்படுகின்றனர், உழைக்கும் பீகார் மக்களை தி.மு.க. துன்புறுத்துகிறது, இது தொடர்பாக எல்லாம் தெரிந்தும் ஆர்.ஜே.டி., காங்கிரஸ் அமைதியாக இருக்கிறது, இவர்கள் அதற்கு எதிர்வினை ஆற்றவில்லை" என்றார்.

**2023 ஆம் ஆண்டிலும் ஒரு வதந்தி!**

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம், தமிழ்நாட்டில், பீகார் உள்ளிட்ட வட மாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதாகச் சமூக ஊடகங்களில் ஒரு போலியான தகவல் மற்றும் தவறாகச் சித்தரிக்கப்பட்ட காட்சிப் பதிவுகள் பரவின.

தமிழ்நாடு காவல்துறை உடனடியாக இந்த வதந்திகள் குறித்து விசாரித்தது. அந்த வதந்திகள் அனைத்தும் தவறானவை, தாக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சம்பவங்கள் உண்மையில் நடக்கவில்லை; ஆந்திர மாநிலத்தில் உள்ளூர் தொழிலாளர்களுக்குள் அடித்துக்கொள்ளும் காணொலிகளும், போலியாக சித்தரிக்கப் பட்ட காட்சிப் பதிவுகளும்தான் அவை - தவறாகப் பயன்படுத்தப்பட்டவை என்று உறுதி செய்தது.

**எத்தகைய பித்தலாட்டம் இது!**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் மற்றும் காவல்துறை தலைமை இயக்குநர் ஆகியோர் வட மாநிலத் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும், வதந்திகளைப் பரப்புவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அப்பொழுதே தெரிவித்தனர்.

பீகார் அரசு அதிகாரிகளும் தமிழ்நாட்டிற்கு வந்து ஆய்வு செய்த பின்னர், தொழிலாளர்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும், எந்த விதமான தாக்குதல்களும் நடக்கவில்லை என்றும் உறுதிப்படுத்தினர்.

குறிப்பாக, 'பிகார் கி அவாஜ்' என்ற பெயரில் யுடியூப் சேனல் நடத்திவரும் மனீஷ் கஷ்யப் என்பவர் திட்டமிட்ட வகையில் போலியான காட்சிப் பதிவுகளை பீகாரிலேயே உருவாக்கி, பின்னணியில் தமிழில் பேசுவது போன்று எல்லாம் 'எடிட்' செய்து அதனை சமூக வலைதளத்தில் பரப்பினார். இந்தக் காட்சிப் பதிவு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

ஆண்டுக்கு 12 ஆயிரம் கூட வருவாய் இல்லாத இவரின் வங்கிக் கணக்கில் 2 மாதத்தில் பல தவணைகளாக 40 லட்சம் ரூபாய் வரை வரவு வைத்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவர் கைது செய்யப்பட்டு மதுரை சிறையில் அடைக்கப்பட்டார்.

ஓராண்டிற்குப் பிறகு பிணையில் வெளிவந்த அந்தப் பேர்வழி, தற்போது பா.ஜ.க.வில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

**பீகாரில் பிரதமர் பேசியது அபாண்டமானது!**

இந்த நிலையில், தற்போது கடந்த 30.10.2025 அன்று சப்ரா தேர்தல் பரப்புரையில், பிரதமர் மோடியின் குற்றச்சாட்டு, அவதூறும், அபாண்டமும் கலந்த ஆதாரமற்ற, போலியான தகவல் மற்றும் வதந்தியின் அடிப்படையிலானது. தமிழ்நாட்டில் பீகார் தொழிலாளர்கள் தி.மு.க. வினரால் தாக்கப்பட்டதாக வெளியான தகவல் உண்மையற்றதும், விஷமத்தனமானதுமாகும்.

தேசியத்தைக் கட்டிக் காப்பதாக 56 அங்குலம் உள்ள தனது மார்பைத் தட்டும் பிரதமர் - இப்பொழுது பீகாரிகள் - தமிழர்கள் என்று பிரித்துப் பேசுவதும், இரு மாநிலத்தவர்களுக்கிடையே மோதல் நடப்பது போலவும் பேசியிருப்பது பச்சையான பிரிவினை வாதம் அல்லவா - இனவாதம் அல்லவா!

பீகாரில் தலைவிரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டம் - வறுமை! கிட்டத்தட்ட 12 லட்சம் வட மாநிலத்தவர்கள் தமிழ்நாட்டின் குக்கிராமம் வரை வேலை செய்கிறார்கள். எந்த இடத்திலும் பிரச்சினை இல்லை. பாதிக்கப்பட்டதாக அவர்கள் யாரும் இதுவரை சொன்னதும் இல்லை!

வட மாநிலத்தவர்கள் தமிழ்நாட்டை நோக்கி வேலை வாய்ப்பைத் தேடிக் குவிவதற்குக் காரணம், பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் - வறுமை கொடிகட்டிப் பறப்பதால்தானே!

பீகாரில் தேர்தல் விரைவில் நடக்க உள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்சினையாக உள்ளது. இதைத் திசை திருப்பவே பிரிவினைவாதத்தை செயற்கையாக உண்டாக்கி, ஒரு மோதல் போக்கைத் தூண்டிவிடுவது புரிகிறது.

தேர்தல் நடக்கும்போது எல்லாம் இதுபோன்ற இன மோதல், மத மோதலை உண்டாக்குவது பி.ஜே.பி.க்கே உள்ள கலாச்சாரம் ஆகும். ஒடிசா சட்டப் பேரவைத் தேர்தலின்போது, கட்டாக்கில் பேசிய பிரதமர் மோடி (20.5.2024) ஒடிசா - பூரி ஜெகந்நாதர் கோவிலின் புதையல் சாவியைத் தமிழ்நாட்டிற்குத் திருடிக் கொண்டு சென்றுவிட்டார்கள் என்று இதே பிரதமர் கூறவில்லையா?

**அப்பொழுதே முதலமைச்சர் கண்டனம்!**

தமிழர்களைத் "திருடர்கள்" என்று கொச்சைப்படுத்துவதைக் கண்டித்து அப்போதே தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கண்டித்தது உண்டே!

அதுமட்டுமல்ல, "ஒடிசாவை, ஒரு தமிழ்நாட்டுக்காரர் ஆளப் பார்க்கிறார்" (வி.கே.பாண்டியன் அய்.ஏ.எஸ். அவர்களை மனதிற்கொண்டுதான் அவ்வாறு குறிப்பிட்டார்) என்றார்.

ஒடிசா மாநிலத்தை ஒரு தமிழ்நாட்டுக்காரர் ஆட்சி செய்ய முயற்சிக்கிறார் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா தேர்தல் நேரத்தில் பேசினாரே!

பொறுப்பு வாய்ந்த பெரிய பதவியில் இருக்கும் பிரதமரும், உள்துறை அமைச்சரும் இப்படிப் பொறுப்பற்ற முறையில் பேசுவதும், மாநிலங்களுக்கிடையே பிரிவினை - பிளவை ஏற்படுத்தி, மோதலை உண்டாக்குவதும் கண்டிக்கத்தக்கது.

**கரோனா காலமும், வட மாநிலத்தவர்களும்!**

கரோனா காலத்தில் தமிழ்நாட்டில் வேலை செய்து வந்த வட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் குடும்பம் குடும்பமாக குழந்தைக் குட்டிகளுடன், மூட்டை முடிச்சுகளை சுமந்து கொண்டு சொந்த மாநிலத்திற்கு நடைப்பயணமாகச் சென்றார்களே, அப்போது வட மாநிலத்தவர்கள்மீது பிரதமர் மோடிக்கு ஏற்படாத கரிசனம், இப்பொழுது வருவதாகக் காட்டிக் கொள்வது ஏன்?

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உதவி வந்ததையும் தடுத்த "தயாள குணவாதிகளா" இப்படிப் பேசுவது?

எல்லாம் தேர்தல் படுத்தும்பாடு! மக்கள் மறந்துவிட மாட்டார்கள்.

இந்தியாவில் வாழும் மக்கள், பி.ஜே.பி.யின் இந்தப் போலித்தனத்தை, இரட்டை வேடத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

பீகாரில் பிரதமர் மோடியின் பேச்சை, தமிழ்நாட்டின் முதலமைச்சர் மட்டுமல்ல, அனைத்துக் கட்சியினரும், தரப்பினரும் (பி.ஜே.பி., அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைத் தவிர) கண்டித்துள்ளனர்.

**பாசிசத்தை வீழ்த்திட வீறுகொண்டு எழவேண்டும்!**

எந்தத் தில்லுமுல்லுகளைச் செய்தாவது ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க வேண்டும்; அதன்மூலம் தங்கள் ஹிந்துத்துவா நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நினைக்கிற இந்தப் பிற்போக்குப் பாசிசத்தை வீழ்த்திட, அகில இந்திய அளவில் முற்போக்குச் சக்திகள் வீறு கொண்டு எழட்டும்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### தலைமைக் கழக வழக்கறிஞர்

# சீ.க.மறைமலையின் தாயார் மறைவு!

## என்.ஆர்.இளங்கோ இரங்கல்!

*சென்னை, நவ.4-*

கழகச் சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஓய்வு பெற்ற தமிழாசிரியர் சீ.க.என்ற புலவர் சீ. கனகசுந்தரத்தின் மனைவியும் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், தலைமைக் கழக வழக்கறிஞருமான சீ.க.மறைமலையின் தாயாருமான திருமதி க.அஞ்சுகம் அம்மையார் அவர்கள் நேற்றைய தினம் இயற்கை எய்தினார்கள் என்ற செய்தி அறிந்து மிகுந்த மன வேதனை அடைந்தேன்.

அன்பான அன்னையை இழந்து வாடும் தலைமைக் கழக வழக்கறிஞர் மறைமலைக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் கழக சட்டத் துறையின் சார்பிலும் எனது சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


### நாகை - பஞ்ச நதிக்குளம் கிழக்கு - வழக்கறிஞர்

# சீ.க.மறைமலை தாயார் க.அஞ்சுகம் அம்மையார் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*நாகை, நவ. 4 -*

நாகை மாவட்டம், பஞ்ச நதிக்குளம் கிழக்கு, வடக்குக்காடு, சீ.க.(எ) புலவர் சீ.கனகசுந்தரத்தின் மனைவியும், மாவட்ட விவசாய அணி, துணை அமைப்பாளர் சீ.க. மதியழகன். தலைமைக் கழக வழக்கறிஞர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீ.க.மறைமலை, திருமதி மணிமேகலை வீரபத்திரன் ஆகியோரின் தாயாருமான க.அஞ்சுகம் அம்மையார்



நேற்று (3.11.2025 - திங்கள்) அதிகாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று மாலை 5 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.